உ

சிவமயம்



பெரியபளை பலையை பிறப்பிடமாகவும் தென்மராட்சி
உசனை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

28.06.2009

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பெரியபளையைப் பிறப்பிடமாகவும்

உசனை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர்**

# திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**28.06.2009**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உங்கள் திருவடிக்கு**
**எங்கள் காணிக்கை...**

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் இருப்பிடமாய்
கருணையின் புகலிடமாய்
அனைவரையும் அரவணைக்கும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு
வையகத்தின் வாழ்க்கையை
இனிதே முடித்துக் கொண்டு
வானுலகில் வாழ்வாங்கு வாழவே
எமை விட்டுப் பிரிந்து சென்ற
எங்கள் இதயக் கோயிலின்
பாதார விந்தங்களுக்கு
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் திருமதி
# பொன்னுத்துரை வரலட்சுமி

பிறப்பு: 27-09-1945 மறைவு: 29-05-2009

## திதி வெண்பா

ஆண்டு விரோதி அரு வைகாசித்திங்கள்
பூண்டதிதி பூர்வபக்க சஷ்டியிலே - ஈண்டு புகழ்
அன்னை வரலட்சுமி வீட்டிலுள்ளோர் புலம்ப
காலச் சென்றடைந்தாள் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர்துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவார் தம்கை.

## தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாழாங்கிருப்பீர் திருவாரூரில்
வாழ்ந்து போதீரே.

## திருவாசகம்

வேண்டத்தக்கதறி வோய் நீ வேண்ட முழுதும்
தருவோய் நீ
வேண்டுமயன் மாற்கரியோய் நீ வேண்டி என்னைப்
பணி கொண்டாய்
வேண்டி நீ யாதருள் செய்தாய் யானு மதுவே
வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டெனில் அதுவும் உன்றன்
விருப்பன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தவன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னை யாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மால் அறியா ஒருவனாய் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோடம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்குழல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருவாயே
உத்மா ஞான சற்குரு நாதா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை மாற்றிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங்காட்டிடைக் கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே

## அபிராமி அந்தாதி

நாயே னையு மிங்கொரு பொருளாக நயந்துவந்து
நீயே நினை வின்றி யாண்டு கொண்டாய் நின்னை
யுள்ள வண்ணம்
பேயே னறியு மறிவுதந்தா யென்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே

## பட்டினத்தடிகள்

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடித்த பின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கறியேன் அத்தனே கயிலாயத்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

விழிக்குத்துணைதிரு மென்மலர்ப்பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா வென்னும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணையவன் பன்னிருதோளும்
பயந்தனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன்
மயூர முமே

## கந்தர் அனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## கந்தபுராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச்செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன்னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்
வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி
மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக
மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்
## திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி
அவர்களின்
## நினைவுக்குறிப்புக்கள்

யாழ்ப்பாணக்குடா நாட்டின் தென்புறத்தே வன்னிப் பெருநிலப்பரப்புக்கு எல்லையாக விளங்கி நிற்பது தென்னந்தோப்புக்கள் அணி செய்யும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் மையமாக விளங்குவது பளை நகரமாகும். அதன்அண்மையில் உள்ள பெரிய பளை என்னும் கிராமத்திலே வாழ்ந்து வந்த பளை இரட்டைக் கேணி கண்ணகை அம்மன் ஆலயதர்மகர்த்தாவாக விளங்கிய அமரர் பொன்னையா செல்லத்துரை அவர்களுக்கும் அவரின் துணைவி அமரர் செல்லத்துரை கனகம்மா அவர்களுக்கும் இல்லற வாழ்வின் பயனாகப் பிறந்த ஆறு பிள்ளைச் செல்வங்களிலே இரண்டாவதாக பிறந்த பிள்ளைதான் (மூத்த பெண்பிள்ளை) அமரர் வரலட்சுமி அவர்களாவர்.

1945ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி பிறந்த அன்னார் பளை கிறிஸ்தவ மிஷன் பாடசாலையில் தனது கல்வியைச் சிறப்புறப் பயின்று முதன்மைபெற்று வரும் நாளிலே தாயாரின் நோய்நிலைமை காரணமாக 7ம் வகுப்புடன் பெற்றோர் வேண்டுதலின் பேரில்தனது பாடசாலைக்கல்வியை இடைவிலகி வீட்டுப் பணியையும் தந்தையின் பொறுப்பிலிருந்த ஆலயத் திருத் தொண்டுகளையும் மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில் அன்னார் 1962ம் ஆண்டு மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவருமாகிய திருவாளர் சின்னக்குட்டியர் பொன்னுத்துரை அவர்களைப் பெற்றோர் நிச்சயித்ததன் பேரில் திருமணம் புரிந்தார். இவர்களது இல்வாழ்க்கையின் பயனாக இவர்கள் நடேசலிங்கம் எனும் பெயருடைய ஆண்பிள்ளைக்குப் பெற்றோராயினர். இவர்கள் தமது ஏகபுத்திரனைச் சிறப்புற வளர்த்து உயர்கல்வி அளித்து இருபது வயதில் ஒர் ஆசிரியராக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அமரர் திருமதி வரலட்சுமி அவர்கள் முறையே 1968, 1978, 1980ம் ஆண்டுகளில் தனது கணவருடன் இந்திய நாட்டிற்கு நீண்ட தலயாத்திரைகளை மேற்கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட புனிததலங்களை ஒருமுறை அல்ல மும்முறை தரிசிக்கும் பேறு பெற்றவராக விளங்கினார். அத்துடன் வாசிப்புப் பழக்கத்தை தனது பொழுது போக்காகவரித்துக் கொண்ட இவர் உலகியல் விடயங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவு பெற்றவராகவும் விளங்கினார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்திலே நாட்டுச்சூழ்நிலைகாரணமாகப் பாரிய இடப்பெயர்வைச் சந்தித்த இவர்கள் உசனைச் சேர்ந்த ஆசிரியையான சின்னராசா சோபனா என்பவரைத் தமது மகனுக்கு மணம்முடித்து வைத்தனர். இதனைத் தொடர்ந்து 2001முதல் உசனில் குடியேறி விசாகன்,ஹரிகரன் என்ற இரண்டு பேரக்குழந்தைகளின் அன்பில் திளைத்து இழந்த சொத்துக்களை மீளத்தேடித் புதிய இல்லமொன்றை அழகுற அமைத்து இவ்வருடம் பங்குனி மாதம் புதுமனையில் குடிபுகுந்தனர்.

இக்காலத்தில் கொடியநோயால் பீடிக்கப்பட்ட அமரர் பொன்னுத்துரை வரலட்சுமி அவர்கள் அதன் தாக்கம் மருத்துவர்களின் சக்தியையும் விஞ்சி நின்ற காரணத்தால் சிகிச்சைகள் பலனின்றி பதினொரு நாட்கள் படுக்கையில் இருந்து 29.05.2009 வெள்ளிக்கிழமையன்று கணவனும் மகனும் மருமகளும் பேரப்பிள்ளைகளும் உறவினர்களும் சோகமே உருவாக சூழ்ந்திருந்த வேளையில் மூடியகண்களை தீடீரென திறந்து கண்கள் கலங்க கண்களால் இறுதிவிடை பெற்று 05.12 மணியாளவில் சிவகதியை அடைந்தார். அவரது காதில் கணவர் இறுதியில் ஓதிய திருவைந்தெழுத்து அவரை மோட்சத்தில் உரிய இடத்தில் சேர்ப்பித்திருக்குமென நம்பி நாம் தேறுதல் பெறுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியவை

★ உலகில் மிகப்பெரிய தீபகற்பம்?

அராபியா(சவுதி)தீபகற்பம்

★ உலகில் பெரியதீவு?

கீறின்லாந்து பரப்பு 2175000 ச.கி.மீற்றர்

★ உலகில் பெரிய மலை?

எவரெஸ்ற்(இந்தியாவில்)இதன்
உயரம் 2.9 கிலோ மீற்றர் ஆகும்.

★ உலகின் பெரிய பூங்கா?

கனடாவில் உள்ள உட்பப்பல்லோ
எனும் தேசியபூங்கா

★ உலகின் பெரிய கடல்?

தென்சீனக்கடல் 29744600 ச.கி.மீற்றர்

★ உலகின் பெரியவிரிகுடா?

ஹட்சன்விரிகுடா - 315500 ச.கி.மீற்றர்

★ உலகில் பெரிய நூதனசாலை?

இயற்கை வரலாற்றுக்குட்பட்ட நியூயோர்க்கில்
உள்ள மியூசியம் ஒப் நெச்சுரல் ஹிஸ்டரிஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உலகில் பெரிய காடு? 1100 ஹெக்டயர் பரப்புள்ள தனி

மரங்களாலான வன கோவியத் ரஷ்யாவில் உள்ள வாஸ்ட் கனிரோஸ் எனும் காடாகும்.

★ உலகில் மிகப் பெரிய ஸ்டேடியம்?

1934இல் கட்டி முடிக்கப்பட்ட செத்தோஸ்லே வாத்தியாவிலுள்ள 2 லட்சத்து 40ஆயிரம் மக்கள் கண்டு களிக்க கூடிய "பிராத்ஸ்டேடியம்" ஆகும்.

★ உலகின் மிகப் பெரிய இராணுவம்?

சீன இராணுவம் ஆகும். இது 46 லட்சம் வீரர்களைக கொண்டது.

★ உலகில் அரசு அலுவல்கள் நடக்கும் பெரிய கட்டடம் எது?

பென்டகன் ஆகும் இது ஐக்கிய அமரிக்காவில் உள்ளது.

★ உலகில் மிகப் பெரிய துறைமுகம்?

நெதர்லாந்தில் உள்ள ரோடார்டாம் ஈரோம் போர்ட் வருடத்திற்கு 315565 கப்பல்கள் வந்து போகின்றது.

★ உலகில் மிகப் பெரிய நதி?

நைல்நதி

★ உலகின் மிகப் பெரிய பெருஞ்சுவர் எது?

சீனப்பெருஞ்சுவர்

★ உலகின் மிகப் பெரிய கோபுரம் எது?

பைசா கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சிறியவை*

★ உலகில் கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம்?
ஆபிரிக்கா

★ உலகில் கடற்கரையில் இருந்து மிகவும் கூடிய தூரத்திலுள்ள தலைநகர் எது?
மெக்சிக்கோ

★ உலகில் கூடிய வெப்பமான இடம் ?
ஆபரிக்காவில் உள்ள லிபியாவில் உள்ள அஸீஸமா எனும் பகுதி 136˚F

★ உலகில் கூடிய ஆண்டுகளாக (400) மழை கிடைக்காத பகுதி?
சிலி நாட்டில் உள்ள அட்டகாம பாலை நிலப்பகுதி

★ உலகில் கூடிய குளிர்ச்சியான இடம்?
அண்டார்டிக்கா 72˚F

★ உலகில் கூடிய அளவில் பயன்படுத்தும் காய்கறி?
வெங்காயம்

★ உலகில் செப்பு அதிகமாக கிடைக்கும் நாடு?
சிலி

★ உலகில் கூடிய தீவுகள் (7100) உள்ள நாடு?
பிலிப்பைன்ஸ்

★ உலகிலேயே மிகக் கூடுதலாக கிடைக்கும் உலோகம்?
அலுமீனியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகை நிலைப் பெயர்கள்

**இருகுரவர்** - தந்தை, தாய்
**இருமரபு** - தந்தைமரபு, தாய்மரபு
**இருசுடர்** - சூரியன், சந்திரன்
**இருபற்று** - அகப்பற்று, புறப்பற்று
**இருதிணை** - உயர்திணை, அஃறிணை
**இருமை** - இம்மை, மறுமை
**இருநிதி** - சங்கநிதி, பதுமநிதி
**இருபொருள்** - கல்வி, செல்வம்(அகம்,புறம்)

**முக்கனி** - மா, பலா, வாழை
**முத்தமிழ்** - இயல், இசை, நாடகம்
**முத்தொழில்** - படைத்தல், காத்தல். அழித்தல்
**முப்பொறி** - மனம், வாக்கு. காயம்
**மும்மலங்கள்** - ஆணவம், கன்மம், மாயை
**முக்குற்றங்கள்** - காமம், வெகுளி, மயக்கம்
**மூவுலகம்** - பூலோகம், பாதளலோகம், வானுலகம்
**முச்சுடர்** - சூரியன், சந்திரன், அக்கினி

**நால்வகைப்பா**- ஆசிரியப்பா,வஞ்சிப்பா,கலிப்பா,வெண்பா
**நால்வகைப்பூ**- கோட்டுப்பூ,கொடிப்பூ,நிலப்பூ, நீர்ப்பூ
**நானிலம்**- குறிஞ்சி, முல்லை,மருதம். நெய்தல்
**நாற்படை**- தேர்,யானை,குதிரை,காலாள்
**நாற்பொருள்**- அறம்,பொருள்,இன்பம்,வீடு

**பஞ்சபட்சி**- வல்லூறு,ஆந்தை,கோழி,மயில்,காகம்
**பஞ்சரத்தினம்**- வைரம்,முத்து,மாணிக்கம்,நீலம்,மரகதம்
**பஞ்சவர்ணம்**- வெண்மை,கருமை,செம்மை,பொன்மை,பசுமை
**பஞ்சஸ்தலம்**- காசி,சோமநாத்,பூரி,இராமேஸ்வரம்,ரிஷிகேசம்
**பஞ்சபரமோட்டி**- அருகர்,சித்தர்,உபாத்தியாயர்,ஆசிரியர், சாதுக்கார்
**பஞ்சபாணம்**- முல்லை,அசோகு,வனசம்,சூதம்,நிலம்
**பஞ்சதேவர்**- பிரமா,விஸ்ணு,உருத்திரன்,மகேஸ்வரன், சாதசிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சசிகை**- தலை,உச்சி,கண்,புருஷம்,முழங்கை

**பஞ்சமூலம்**- செவ்வியம்,சித்திரமூலம்,கண்டுபாரங்கி,சுக்கு,
பேரரத்தை

**பஞ்சவாசம்**- இலவங்கம்,ஏலம்,கற்பூரம்.சாதிக்காய்,
தக்கோபம்

**பஞ்சலோகம்**- இரும்பு,ஈயம்,செம்பு,பொன்,வெள்ளி

**ஆறுசுவை**- தித்திப்பு,புளிப்பு,உவர்ப்பு,துவர்ப்பு,கைப்பு,
கார்ப்பு

**ஆறுபகை**- காமம்,குரோதம்,லோபம்,மோகம்,மதன,
மாச்சரியம்

**ஆறு அறிவுகள்**- பார்வை,கேள்வி,முகர்தல்,சுவைத்தல்,
தொடுகை,பகுத்தறிவு

**ஆறுபருவம்**- கார்,கூதிர்,முன்பனி,பின்பனி,முதுவேனில்,
இளவேனில்

**ஆறுதொழில்**- ஈதல்,ஏற்றல்,ஓதல்,ஓதுவித்தல்,வேட்டல்,
வேட்பித்தல்

**ஏழிசை**- ஷட்சம்,ரிஷபம்,காந்தராம்,மத்திமம்,பஞ்சமம்,
தைவதம்,நிஷாதம்,

**ஏழுஸ்வரங்கள்**- ஸ,ரி,க.ம,ப,த,நி

**ஏழுமலை**- கைலை,இமயம்,மந்தரம்,விந்தம்.நிடதம்,ஏமகூடம்,
நீலகிரி

**ஏழுபருவம்**- பேதை,பெதும்பை,மங்கை,மடந்தை,அரிவை,
தெரிவை,பேரிளம்பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எட்டு ஐஸ்வரியம்**- அரசு.மக்கள்,சுற்றம்,பொன்,மணி,நெல், வாகனம்,அடிகளை

**அஷ்டதனம்**- அழகு,அறிவு,சொத்து,திறமை.குணம்,தனம், குலம்,வயது

**எண்தொகைநூல்கள்**- நற்றிணை,குறுந்தொகை,ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து,பரிபாடல், கலித்தொகை,அகநானூறு. புறநானூறு,

**நவரத்தினம்**- வைரம்,வைடூரியம்கோமேதகம்,முத்து, மரகதம்,புஷ்பராகம்,மாணிக்கம், நீலம்,பவளம்,

**நவக்கிரகம்**- சூரியன்,சந்திரன்,செவ்வாய்,புதன்,வியாழன், சுக்கிரன்,சனி,ராகு,கேது

**நவதானியம்**- எள்ளு,கொள்ளு,உழுந்து,பயறு,கடலை,நெல்லு, சாமை,திணை,துவரை

**பத்துப்பாட்டு**- திருமுருகாற்றுப்படை.பெரும்பாணாற்றுப்படை, சிறுநாற்றுப்படை,பெருநாற்றுப்படை, முல்லைப்பாட்டு,மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை,குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை,மலைபடுகடாம்

**தசாவதாரம்**- மச்சம்,கூர்மம்,வராகம்,நரசிம்மன்,வாமணன், கூர்மம்,பலராமர்,பரசுராமர்,இராமர், கிருஷ்ணர்,கல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதம்

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமைமுதல் நவமிவரையுள்ள 9 நாட்கள் கொண்ட விரதம்.

## அனுஷ்டிக்கும் முறை :-

முதல் 8நாட்களும் மாலையில் பால்பழம் உட்கொள்ளலாம் இறுதி நாள் உபவாசம் மறுநாள் பாரணை இயலாதவர்கள் தினமும்மதியம் ஒருபொழுது உணவருந்தாலம், இறுதி நாள் உபவாசம் மறுநாள் பாரணை ஒன்பது வருடங்கள் விரதம் இருத்தல் வேண்டும்.

## பலன் :-

துர்க்காதேவி, மகாலக்குமி, சரஸ்வதி ஆகிய முத்தேவிகளினதும் இஷ்டசித்திகள் கிடைக்கும். மனத் தைரியம் உடல் தைரியம், அஷ்ட ஐஸ்வர்யம்,கலைஞானம், கல்வி முதலான அனைத்தும் சித்திக்கும்.

## முதலாவது நாள் :-

துர்க்கை அம்பாளை வேண்டி மல்லிகை, வில்வம் ஆகியவற்றால் அர்ச்சித்தும் அலங்கரித்தும் வெண் பொங்கல், சுண்டல், வாழைப்பழம். முதலியன நிவேத்தித்தும் தோடி ராகத்தில் கீர்த்தனைகள் கீதங்கள் பாடியும் வழிபடல்.

## இரண்டாவது நாள் :-

துர்க்கை அம்பாளினைத்துதித்து முல்லை, துளசி முதலானவற்றினால் அர்ச்சித்தும், புளிச்சாதம்,மாம்பழம் முதலியன நிவேதித்தும் கல்யாணி ராகத்தில் பாடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூன்றாவது நாள் :-

துர்க்கை அம்பாளினை சம்பங்கி, மரு முதலியவற்றினால் பூஜித்தும் சக்கரைப் பொங்கல் பலாப்பழம் முதலானவை படைத்தும் காம்போதி இராகத்தில் பாடியும் தொழுதல்.

### நான்காவது நாள் :-

லஷ்மி தேவியை ஜாதி புஸ்பம் கதிர்பச்சை முதலியவற்றினால் பூஜித்தும் கறிச்சாதம் கொய்யாப்பழம் முதலியவை நிவேதித்தும் பைரவி இராகத்தில் பாடியும் தொழுதல்.

### ஐந்தாம் நாள் :-

பாரிஜாதம், வீபூதிப்பச்சை போன்றவற்றினால் பூஜித்தும் தயிர்சாதம் அப்பளம் மாதுளம்பழம் முதலானவை படைத்தும் பந்துவராளி இராகத்தில் பாடியும் லஷ்மிதேவியை தொழுதல் வேண்டும்.

### ஆறாவது நாள் :-

லஷ்மி தேவியை செம்பருத்தி சந்தன இலை முதலியவற்றால் அர்ச்சித்தும் நிவேதனமாக தேங்காயச்சாதம் வடகம், நாரத்தம் பழம், நிவேதித்தும் நீலாம்பரி இராகத்தில் பாடியும் வணங்குதல் வேண்டும்.

### ஏழாம் நாள் :-

சரஸ்வதி தேவிக்கு தும்பை இலை தாழம் பூக்களில் ஆராதித்தும் எலுமிச்சம் பழச்சாதம் பேரீந்து போன்றவற்றை நிவேதித்தும் பிலகரி இராகத்தில் பாடியும் சரஸ்வதியை மகிழ்விக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எட்டாம் நாள் :-**

ரோசா பன்னீர் இலைகளினால் சரஸ்வதி தேவிக்கு அர்ச்சனை செய்து பாயாசம் முறுக்கு திராட்சை போன்றவற்றை படைத்தும் பன்னாகவராளி இராகத்தில் பாடியும் வழிபடல்.

**ஒன்பதாம் நாள் :-**

தாமரை மருக்கொழுந்து என்பவற்றினால் பூசித்து நைவேத்தியமாக அக்கார அடிசில் திரட்டுப்பால், நாவல் படைத்தும் வசந்தாவிலும் பாடி சரஸ்வதியை வழிபடல்.

# வரலட்சுமி விரதம்

இவ்விரதம் ஆவணி மாத பௌர்ணமிக்கு முதல் வருகின்ற வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

**நிவேதனங்கள் :-**

நெய்யுடன் கூடிய அன்னம் (நெய் சாதம்)

**அனுஷ்டிக்கும் முறை :-**

மதியம் ஒருபொழுது உணவு உட்கொள்ளலாம் வரலஷ்மிக்கான கும்பம் பச்சை அரிசியால் நிரப்பப்பட்டு வைக்கப்பட வேண்டும். ஒன்பது நூல்கள் கொண்டு இழைத்து அதற்குரிய நாமங்களோடு ஒன்பது முடிச்சுக்கள் இடப்பட்டு வலது கையில் அணிந்து கொள்ளப்படும் ஒன்பது வருடங்கள் அனுட்டித்து நிறைவு செய்து கொள்ளலாம்.

**பலன் :-**


புத்திர பாக்கியம் கிடைக்கும் சகல செல்வயோகம் மிக்க வாழ்வு கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 | | 29 |
| 09 | | 05 |
| 1945 | | 2009 |



எமது பாடசாலை சக ஆசிரியர் திரு.பொ.நடேசலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

## பொன்னுத்துரை வரலட்சுமி

விழிகள் இமைக்க மறுக்கின்றதே

விதிதான் உம்மை அழைத்த செய்தி கேட்டு

உறவாய் ஒளியாய் மண்ணில் திகழ்ந்தவரே

உலகினை விடுத்து சென்றதேனோ

வையகம் மீதில் நின் வரவிற்காய்

அழியா உமது அன்பதனை

அவனியில் இனியாம் பெறமுடிவதெப்போ?

அன்னாரின் பிரிவினால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினரோடு நாமும் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி !!! சாந்தி !! சாந்தி !**


யா/ விடத்தற்பளை கமலாசனி
வித்தியாலயம்
30. 05. 2009

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

கஜானன் பன்முகச்சேவை [illegible] வீதி, [illegible]. தொ.பே :-0602213378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல

2009.05.29 அன்று அமரத்துவமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் பொன்னத்துரை வரலட்சுமி

அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் சிகிச்சை
அளித்த மருத்துவர்களுக்கும் ஆறுதல்
கூறியோர்களுக்கும்
மரணச்செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து எம்துயரில்
பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும்
தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
கடிதம் மூலமும் அஞ்சலிப்பிரசுர, மூலமும் அனுதாபத்தை
வெளிப்படுத்தியோருக்கும் இன்றைய சபிண்டிகரண
கிரியைகளில் கலந்து கொண்டிருக்கும் உற்றார்
உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் கிரியைகளை
விதிப்படி நிறைவேற்றிய சிவாச்சாரியார்களுக்கும்
இம்மலரை அச்சிட்டுத்தந்த பொஸ்கோ
நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்

துவாரகை
உசன், மிருசுவில்.
28.06.2009

இங்ஙனம்
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



Sivaranjanam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org